

கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. இளைஞர் அணி

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**06/11/2024 புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா | விழுப்புரம் - புதுச்சேரி பிரதான சாலை, விழுப்புரம். |
| காலை 11:00 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம். |
| மதியம் 12:30 மணி | விழுப்புரம் தெற்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். |
| இரவு 7:00 மணி | சட்டமன்ற உறுப்பினர் கதிரவன் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சி. |

**07/11/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் 'கல்லணை' செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024



## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




தி.அ.முகமது சகி – தரணிவேந்தன் கார்த்திகேயன் முன்னிலை!

## வேலூர் தொகுதி நிர்வாகிகள் கூட்டம்!

### மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமை!

வேலூர், நவ. 6 -

வேலூர் தொகுதி தி.மு.க. கூட்டம் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, வேலூர் தொகுதி பொறுப்பாளர் தரணிவேந்தன் கார்த்திகேயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: -

தீர்மானம் : 1 - கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக அறிவித்து பொறுப்பேற்கச் செய்த தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. துணை முதல்வராக பொறுப்பேற்று கொண்ட உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கூட்டம் வாழ்த்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறது.

தீர்மானம் : 2 - தலைமைக் கழக வேண்டுகோளுக்கு இணங்க தலைமைக் கழகம் மூலம் ஏற்கனவே நமக்கு வழங்கப்பட்டுள்ள ஓ.எம்.ஆர். படிவத்தை மேலும் எந்தவிதமான காலதாமதம் செய்யாமல் உடனடியாக வாக்குச்சாவடி வாரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள படிவங்களை மாநகரக் கழகம் வசம் ஒப்படைக்குமாறு பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை ஏகமானதாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தீர்மானம்: 3 - இந்திய தேர்தல் ஆணையத்தால் இம்மாதம் நவம்பர் 16, 17 மற்றும் நவம்பர் 23, 24 சனி - ஞாயிறு ஆகிய தேதிகளில் வாக்காளர்கள் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் ஆகியவற்றிற்கு சிறப்பு முகாம்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு வரும் ஜனவரி 1, 2025 அன்று 18 வயது பூர்த்தி செய்யும் புதிய வாக்காளர்களை அடையாளம் கண்டு வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர் இடம் பெறும் வகையில் தங்கள் பணிகளை பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அந்தந்த பாகத்திற்கு என நியமிக்கப்பட்டுள்ள பிஎல்ஏ-2 ஆகியோர் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ள வேண்டுமென கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 4 - 2026-ல் நடைபெறும் தமிழ்நாடு பொது தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி இலக்கு என கழகத் தலைவர் அறிவிப்பு செய்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே அதைத் தொடர்ந்து பல்வேறு தேர்தல் ஆயத்த பணிகளை தலைமைக் கழகம் மேற்கொள்ள உள்ளது. எதிர்வரும் காலங்களில் எந்தவித சுணக்கமும் தயக்கமும் இல்லாமல் தலைமைக் கழகம் அறிவுறுத்தும் அனைத்து தேர்தல் பணிகளையும் உடனுக்குடன் செய்து கொடுப்பது என அனைவரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்வதுடன் கழகத் தலைவர் அவர்களால் வேலூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக நியமிக்கப்படும் வேட்பாளருக்கு கழகத்தின் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் அதிக வாக்குகள் பெற்று தரும் வகையில் மக்கள் பணிகளை நிர்வாகிகள் மேற்கொள்வதுடன் கழக ஆட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் தங்கள் பணிகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், அன்புநிதி,

மாநகர துணைச் செயலாளர்கள் முன்னா ஷெரீப், ஒய்.தேவநேசன், தங்கமணி, ஆனந்தன், பகுதிச் செயலாளர்கள் கணேஷ் சங்கர், எஸ்.தயாள் ராஜ், வி.ஜி.கே. சுந்தரவிஜி, ஆர்.சத்திய மூர்த்தி, ஜி.பாலமுரளி கிருஷ்ணன், முனைவர் பாஷா முருகப்பெருமாள், ஆர்.பி.இ.சசிக்குமார், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஜி.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் நூருல்லா, மண்டலக் குழுத் தலைவர்கள் வீனஸ் நரேந்திரன், யூசுப் கான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் வடக்கு தொகுதிக்குட்பட்ட பி எல் ஏ–2 பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் தொகுதி பொறுப்பாளர் கம்பம் செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா. ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல், இளைஞரணி சௌந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



தி.மு.க. சட்டத்துறை தென் மண்டலம் – 1 தி.மு.க. சட்டத்துறை சார்பில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, தேனி மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நெல்லை அப்ஃனா பார்க்கில் மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், சட்டத்துறை துணைச் செயலாளர் எஸ்.ராஜா முகம்மது, தலைமைக் கழக வழக்கறிஞர் மனோஜ், நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## பூவிருந்தவல்லியில் பாக முகவர்கள் கூட்டம்!

திருவள்ளூர், நவ. 6–

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைபடி சோராஞ்சேரி கண்ணப்பாளையம் ஊராட்சிகளில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை ஆய்வு கூட்டம் ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் பூவிருந்தவல்லி ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற தேர்தல் பணி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் பொதுகுழு உறுப்பினர்கள் காஞ்சனா சுதாகர், வி.குமார், வழக்கறிஞர் என்.பி.மாரிமுத்து, ஏ.ஜனார்தனன், எம்.இளையான், கே.எஸ்.புகழேந்தி, சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், வயலை ஆர்.பிரபாகரன், ஏ.ஜி.ரவி, குமரேசன், என்.சண்முகம், வி.தணிகாசலம், சுகுமாரன், எம்.அருணாச்சலம், எம்.ராம்பாபு, பேட்டை த.திருமலைராஜ், மு.ராஜாராம், கேசவன், வழக்கறிஞர்கள் அருண், எம்.அத்திகிரி அருளாளன், திருலோகசுந்தர், பாரிமளழகன், சாய்மோகன், ஸ்ரீதர், ஜெகதீஷ், விஜயரங்கன், அன்பழகன், கோவிந்தராஜ், மே.ம.முத்து, சி.வெங்கடேசன், எம்.கே.ராதா, மோகன் தாஸ், தேவி நித்தியனந்தம், டில்லி பாபு உள்பட பலர் பங்கேற்றனர்.